திரு. எம். ஆர். கோவேந்தன்: ஆண்டிவயல் அரிசன நலப் பள்ளி தொடர்ந்து மாதா கோவிலில் நடந்துவருகிறது. நீண்ட நாட்களாக அப்படியிருப்பதால், மாதா கோவிலில் ஏதாவது நடக்கிற காலத்தில் லீவ் விட்டுவிடுகிறார்கள். ஆகவே அந்தப் பள்ளிக்கூடத்திற்கு என்று உடனடியாக ஒரு கட்டிடம் கட்டு வதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: ஆண்டிவயல் பொறுத்த வரையில் சென்ற ஆண்டே அதற்கான ஒரு கட்டடம் கட்டப் படும் ஒரு சூழ்நிலை இருந்தது. இருந்தாலும், இந்தப் பகுதி கடற்கரைக்கு அருகாமையில் அமைந்திருக்கிற காரணத்தால் அங்கே ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டு கூரை வேயப்படுமானால் அங்கிருக்கக்கூடிய காற்றின் காரணமாக அந்தக் கட்டடம் பழுதடையக் கூடிய நிலை காரணமாக தற்போது அதிகாரிகள் ஆர். ஸி. ஸி. ரூஃபிங் போடுவதற்கான பரிந்துரையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதற்கான திருத்த மதிப்பீடு ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாயாகிறது. அது தற்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகள்

* வினா எண் 280—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமண்யன்: திரு எம். சின்னசாமி: திரு எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறை விடுதியில் மாணவர் மாணவியர்கள் குலுக்குச்சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களா?

(ஆ) ஆம் எனில் அந்த முறையை ரத்து செய்ய அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறை விடுதியில் மாணவர் மாணவியர் குலுக்குச் சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமென்று கடந்த பிப்ரவரி திங்களில் ஆணையிடப் பட்டது. இம்முறையில் குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டதை யொட்டி அரசு இதனை மறுபரிசீலனை செய்து அம்முறையை ரத்து செய்து தேர்வு குழு மூலம் தேர்ந்தெடுக்கும் முறையையே அமுல்படுத்தும்படி நவம்பர் திங்களில் மறு ஆணை வெளியிடப் பட்டுள்ளது.

1982 பிப்ரவரி 19]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே இயங்கி வருகின்ற ஆதிதிராவிடநல விடுதிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஆதி திராவிடர்களுக்கு இத்தனை சதவிகிதம். பின்தங்கிய வகுப்பினருக்கு இத்தனை சதவிகிதம் என்றிருக்கிறது. அதைப்போல் உடல் ஊனமுற்றோர், விதவைகளின் குழந்தைகள் ஆகியோருக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இடத்தை ஒதுக்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல் தற்போது விடுதிகளில் மாணவர்களைச் சேர்க்கின்ற போது, அவர்கள் சார்ந்த இனங்களின் அடிப்படையிலே வருமானத்தின் அடிப்படையிலே சேர்க்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துகளை இந்த அரசு பரிவோடு பரிசீலனை செய்யும்.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே பிளஸ் இரண்டு படிப்பை அமுல்படுத்தியதால். உயர்நிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள் 11 ஆவதுக்குப் பிறகு மேலும் ஓராண்டு படிக்கின்ற நிலையில், கூடுதலாக 100 மாணவர்கள் சேரக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு, இந்த மாநிலத்திலே இருக்கின்ற அனைத்து ஆதி திராவிட நல விடுதிகளிலும் ஒரு குறிப்பிட்ட சதவிகித மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுகூட அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 10 சதவீதம் கூடுதலான மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்ற ஆணையை இந்த அரசு பிறப்பித்திருக்கிறது. வருகின்ற ஆண்டில் இருக்கின்ற இட வசதிகளையும், அரசின் நிதி நிலைமையையும் பார்த்து இதுபற்றி மேலும் பரிசீலனை செய்யலாம்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களை குலுக்குச் சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கும் முறை இதுவரையில் எப்போதும் நடந்ததில்லை என்பது அரசுக்குத் தெரியும். இது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்களிடம் சொல்லியபோது, 1000 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதாக உறுதி தந்தார்கள். இப்போது உள்ளூரிலே இருக்கின்ற மாணவர்கள் சிலருக்கு கிடைத்து, பல மாணவர்கள் 3, 7 மைல்களிலிருந்து பள்ளிக்கு வர வேண்டிய ஒரு அவலமான நிலைமை இருக்கிறது. எனவே, முதலமைச்சர் அவர்கள் தந்த உறுதியின் அடிப்படையில், ஆதி திராவிட நல அமைச்சர் அவர்கள் நீண்ட தூரத்திலே இருந்து நடந்து வருகின்ற மாணவர்கள் அனைவருக்கும் ஒரு தனி ஸ்கீம் போட்டு, உடனடியாக அவர்களுக்கு வசதி செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலளித்திருக்கிறேன். அரசின் நிதிநிலைமையைப் பார்த்து, அதைப்பற்றி நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு அவர்களின் வருமான வரம்பு, விடுதியிலே இருந்து இருக்கின்ற தூரம் ஆகியவற்றின் அடிப்படையிலே எடுத்துக் கொள்கிறார்கள் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலேயே, ஒரு வேளை உணவுக்கு வழியில்லாமல் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய வறுமையை கணக்கிலெடுத்து, அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு தனி கவனம் செலுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற நிலைமைகளை உணர்ந்து தான், ஏற்கனவே அரசு அறிவுரை குழு அமைத்து, அவர்கள் மாணவ, மாணவிகளை தேர்ந்தெடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அதிலே, அந்தக் குழுவிலே இருக்கிறார்கள். அவர்களும் அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சபை கூட்டத்தின் கடைசி நாள் ஸ்டேட் முழுவதும் ஸ்ட்ரைக் ஏற்படக்கூடிய சிட்சுவேஷன் வரக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. திரு கே. டி. கோசல்ராம் என்ற எம். பி. ஒரு ஊழியரை அடித்து...

(முற்பகல் 10.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு கடைசி நாள். எல்லாவற்றையும் இன்றைக்கே எடுத்துக் கொள்வது என்பது கடினமான காரியம். ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இன்று எடுத்துக் கொள்ளப் போகிறோம்.

திரு. ரா. உமாநாத்: எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. ஒருவரை ஒரு ரெஸ்பான்சிபிள் எம். பி. அடித்துஇருக்கிறார். அவரை அரஸ்ட் கூட பண்ணவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS